**அனுப்புநர்**
மரு.ப. பிரீத்தா, MBBS,DDVL.,
துணை இயக்குநர் மருத்துவப்
பணிகள்(தொழுநோய்),
வேலூர்- 632 001.

**பெறுநர்**
முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர்.

ந.க.எண்:07/**MO/SHS**/2019    நாள்: 9.01.2020

**ஐயா ,**

**பொருள்:** தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டம் - வேலூர் மாவட்டம் - ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் - 30.01.2020 அன்று சிறப்பு இறை வணக்க கூட்டம் (Prayer Meeting) / தொழுநோய் ஒழிப்பு உறுதி மொழி எடுக்க கோருதல் -சார்பாக.

**பார்வை:**

1.பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை இயக்குநர், சென்னை அவர்களின் 30.12.2019 நாளிட்ட கடிதம், கடித எண் 49/SLAC/SHS/2019.

***

ஒவ்வொரு ஆண்டும் நமது தேசப்பிதா மகாத்மா காந்தியின் நினைவு தினமான சனவரி 30 ஆம் நாளன்று உலகம் முழுவதும் **'உலக தொழுநோய் ஒழிப்பு தினமாக'** அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் சனவரி 30 முதல் பிப்ரவரி 13 வரை இரு வாரங்களுக்கு தொழுநோய் ஒழிப்பு இரு வாரமாக அனுசரிக்கப்படுகிறது.

பார்வையில் கண்ட கடிதங்களின்படி இந்த ஆண்டு சனவரி 30 ஆம் நாளன்று அனைத்து பள்ளிகளில் சிறப்பு இறை வணக்க கூட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு 20.01.2020 அன்று நமது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட அலுவலர்களுக்கான ஸ்பர்ஷ் (Sparsh) தொழுநோய் ஒழிப்பு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற உள்ளது. 30.01.2020 ஆம் நாளன்று சிறப்பு இறை வணக்க கூட்டம் (Prayer Meeting) கூட்டுவது மேலும்.

1. ஸ்பர்ஷ் உறுதி மொழி எடுப்பது.
2. . தொழுநோய் பற்றியவினாவிடைகள் வாசிப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**இதன் சார்பாக அனைத்து பள்ளிகளிலும் வரும் 30.01.2020 அன்று சிறப்பு இறை வணக்க கூட்டம் (Prayer Meeting) நடத்த அறிவுறுத்தும்படி கனிவுடன் வேண்டுகிறேன்**

**இந் நிகழ்ச்சியை பற்றிய அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு உத்திரவிடுமாறு வேண்டுகிறேன்.**

தங்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி !

**இணைப்பு:**

1. மாவட்ட ஆட்சியரின் உறுதி மொழி
2. ஸ்பர்ஷ் உறுதி மொழி
3. தொழுநோய் பற்றியவினாவிடைகள்

துணை இயக்குநர்
மருத்துவப் பணிகள்(தொழுநோய்)(பொ),
வேலூர்- 632 001.

## 2. ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழி

தொழுநோய், மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியா கிருமியினால் காற்றின் மூலம் பரவுகிறது என்பதனை நான் அறிவேன்.

உணர்ச்சியற்ற தேமல், படை போன்ற தோல் நோய் உள்ளவர்களையோ அல்லது தொழுநோயினால் உடல் குறைபாடு உள்ளவர்களையோ எனது குடும்பத்திலோ அல்லது வீட்டின் அருகிலோ இருந்தால் உடன் அவர்களை அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது அரசு மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை எடுக்க ஏற்பாடு செய்வேன்.

அவர்களை அன்பாகவும், எனது குடும்ப உறுப்பினர்கள் போலவும் வேறுபாடு இல்லாமல் உரிய மரியாதையுடன் நடத்துவேன்.

தொழுநோய் முற்றிலும் குணமாகக் கூடியது. ஆரம்ப நிலை சிகிச்சை உடல் குறைபாட்டை ஏற்படுத்தாது, தொழுநோயாளிகளை ஒதுக்கக்கூடாது போன்ற விபரங்களை அண்டை அயலாருக்குத் தெரிவித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவேன்.

தேசப்பிதா மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில் தொழுநோய் இல்லாத இந்தியா உருவாக அனைவருடன் இணைந்து ஒத்துழைப்பேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்.